## ரூ. 62.51 கோடியில்

# 740 பணி புரியும் மகளிர் பயன்பெற 12 புதிய ‘தோழி’ விடுதிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்!

**சென்னை, நவ. 14 -**

**ரூ. 62.51 கோடி மதிப்பீட்டில் 740 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் 12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணி, ரூ.27.90 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் “பூஞ்சோலை” அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் ரூ.7 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.11.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், திருப்பத்தூர், நாமக்கல், மயிலாடுதுறை, விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திருவாரூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 62 கோடி 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 740 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் 12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணிகள், கோயம்புத்தூர் “பூஞ்சோலை” அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு 27.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி. சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

**பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் “தோழி விடுதிகள்”!**

பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊர்களை விட்டு பிற நகரங்களுக்கு இடம் பெயரும் பணிபுரியும் பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான “தோழி விடுதிகள்” தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கும் பெண்களின் தேவைகளுக்கேற்ற பல்வேறு வகையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தோழி விடுதிகளின் அமைவிடம், வசதிகள், கட்டண விவரங்கள் உள்ளிட்ட தகவல்களையும், முன்பதிவு செய்வதற்கான வசதியையும் www.thozhi.in என்ற இணையதளத்தின் மூலம் பெறலாம்.

தமிழ்நாட்டில் இதுவரை சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருநெல்வேலி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய 15 மாவட்டங்களில் 19 தோழி விடுதிகள் நிறுவப்பட்டு, 1,824 பணிபுரியும் மகளிர் பயனடையும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் தரமணி மற்றும் சேப்பாக்கம், மதுரை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், தர்மபுரி, தேனி, சிவகங்கை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய இடங்களில், 176.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14 புதிய ‘தோழி’ விடுதிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.05.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இவ்விடுதிகள் 2,000 பணிபுரியும் பெண்கள் தங்கி பயன்பெறும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

**12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்!**

அதன் தொடர்ச்சியாக, பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, கூடுதலாக திருப்பத்தூர், நாமக்கல், மயிலாடுதுறை, விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திருவாரூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மொத்தம் 62 கோடி 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 740 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் அமைக்கப்படவுள்ள 12 புதிய தோழி விடுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள். இதன்மூலம் தமிழ்நாட்டில் 27 புதிய தோழி விடுதிகள், கூடுதலாக 2,790 மகளிர் பயன்பெரும் வகையில் வரும் ஆண்டில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளன.

இத்தோழி விடுதிகளில் பயோமெட்ரிக் உள் நுழைவு, 24x7 பாதுகாப்பு வசதி, WiFi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, பொழுதுபோக்கு அறை, குளிரூட்டப்பட்ட அறை, சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிரின் பாதுகாப்பான, வசதியான தங்குமிடங்கள் தேவைகளை கருத்தில் கொண்டு, பணிபுரியும் பெண்கள் மட்டுமல்லாது, பயிற்சி, உயர் கல்வி, நேர்காணல் போன்ற குறுகிய காலங்களுக்கு நகரங்களுக்கு வரும் அனைத்து மகளிரின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, இவ்விடுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**கோயம்புத்தூர் “பூஞ்சோலை” அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு அடிக்கல் நாட்டுதல்!**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் அரசினர் கூர்நோக்கு இல்லங்களில், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் சிறார்கள் தங்கவைத்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இங்கு சிறார்களுக்கு தேவையான உணவு, உடை மற்றும் இதர அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்படுவதுடன், இச்சிறார்களை நல்வழிப்படுத்தும் நோக்கத்துடன் ஆற்றுப்படுத்துதல், போதைப் பொருள் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், அடிப்படை திறன் வளர்ப்புப் பயிற்சிகள் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன.

இந்த இல்லங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த ஓய்வு பெற்ற நீதியரசர் சந்துரு அவர்கள் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் “பூஞ்சோலை” என்ற பெயரில் அமையவுள்ள அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லத்திற்கு 16 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், திருச்சிராப்பள்ளி, அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு 10 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்கள்.

**இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தல்!**

சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு தற்போது 14,876 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் முதல் தளம் கொண்ட புதிய கட்டடம் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்கள். இந்த இல்லத்தில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் 70 சிறுவர்கள் தங்கி பயன்பெறும் வகையில் சிறுவர்கள் தங்கும் அறைகள், வகுப்பறைகள். நூலக அறை, திறன் பயிற்சி அறை, மருத்துவ அறை, சமையலறை, உணவுக் கூடம், உள்ளிட்ட அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளுடன் இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், கூடுதல் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ஷரண்யா அறி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




வடக்கு மண்டலம், தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டத்திற்குட்பட்ட, 5 சட்டமன்றத் தொகுதிகளின் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர் – 2, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு வடக்கு மண்டலப் பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்டச் செயலாளர்கள் பழனியப்பன், ஆ.மணி, தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் செங்குட்டுவன், அரியப்பன், பாரி, கே.குமரேசன், எவரேஷ்ட் நரேஷ்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50 கோடியில்

# 2500 பேருக்கு வேலைவாய்ப்புடன் ஆடை உற்பத்தி அலகு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்து!

**சென்னை, நவ. 14 -**

**திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50 கோடி முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (13.11.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், திருவாரூர் மாவட்டத்தில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், திருவாரூர் மாவட்டத்தில், இந்த திட்டம் நிறுவப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

**SCM Garments பிரைவேட் லிமிடெட்!**

ஜவுளித் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் SCM Garments குழுமத்தின் துணை நிறுவனமான SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்), உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஆடைகள் தயாரிக்கும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவாரூர் மாவட்டத்தில் ஆடை உற்பத்தி அலகு அமைத்திட திட்டமிட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்றைய தினம், இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர், நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் கே.எம். சுப்ரமணியன், SCM Garments நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.பி.கே. பரமசிவம், செயல் இயக்குநர் கௌசிக் குமரன், திட்ட மேலாளர் ஸ்ரீநிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மகளிர்க்காக நடமாடும் மருத்துவ ஊர்திகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

**பணி நியமன ஆணைகள் வழங்குதல்!**

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்காக 196 உதவியாளர்கள் பணியிடத்திற்கும், குடும்ப நல இயக்ககத்தின் கீழ் 18 வட்டார சுகாதார புள்ளியியலாளர் பணியிடத்திற்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக தமிழ்நாடு மாநில போக்குவரத்து இயக்ககத்தின் கீழ் 19 திறன்மிகு உதவியாளர்II (பொருத்துநர்- II) பணியிடத்திற்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும், என மொத்தம் 233 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், நடமாடும் மருத்துவ ஊர்தியை பார்வையிடுதல்!**

புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், மகளிர் நல்வாழ்விற்காக 40 கோடி ரூபாய் செலவில் 38 நடமாடும் மருத்துவ ஊர்திகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு ஏற்படும் மூன்று முக்கிய புற்றுநோய் மற்றும் இதர நோய்களுக்கான பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் 1.10 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ ஊர்தியை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இத்திட்டத்தின் கீழ், நடமாடும் மருத்துவ ஊர்தியின் மூலம், பெண்கள் வசிக்கும் வசிப்பிடத்திற்கு அருகிலேயே மூன்று முக்கிய புற்றுநோய்களான கருப்பைவாய், மார்பக மற்றும் வாய் புற்று நோய்களுக்கான பரிசோதனை மற்றும் பிற முக்கிய நோய்களான நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இரத்த சோகை, இருதய நோய்கள் போன்றவற்றிற்கான பரிசோதனை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வாகனத்தில் டிஜிட்டல் மேம்மோகிராபி, ECG கருவி, செமி ஆட்டோ அனலைசேர் (Semiauto analyser) உட்பட பல வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

1.10 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மாதிரி வாகனமானது காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதை தொடர்ந்து, மேலும் 37 வாகனங்கள் 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மு.விஜயலட்சுமி, மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. எ.அருண் தம்புராஜ், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. த.க. சித்ரா, குடும்ப நல இயக்குநர் மரு. வெ.சத்யா, தமிழ்நாடு சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநர் எஸ்.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம் கீழ் அருங்குணம் ஊராட்சியில் ரூ 2.63 கோடி மதிப்பீட்டில் பெருமுக்கல் வழியாக செல்லும் குன்னப்பாக்கம் சாலையை அகலப்படுத்தி புதியதார்சாலை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் ரவிச்சந்திரன், ஒன்றிய சேர்மன் தயாளன், துணை சேர்மன் பழனி, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன், மரக்காணம் மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் கவிதா, உதவி பொறியாளர் தீனதயாளன் உள்ளனர்.